# தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்
# &
# இந்தியவானிலைத்துறை
## வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம், கோவை
## திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (31.12.2022 முதல் 04.01.2023 )

**அறிக்கைஎண் 104/2022** **தேதி.30.12.2022**

### மாநிலத்தின் கடந்தவார வானிலை

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 26°செ முதல் 33°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 19°செ முதல் 25°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 14°செ முதல் 20°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 07°செ முதல் 11°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஒரு சில இடங்களில் பரவலாக மழை பெறப்பட்டது.

### திருப்பூர் மாவட்டத்தின் கடந்தவார வானிலை

திருப்பூர் மாவட்டத்தின் 26.12.22 முதல் 29.12.22 வரையிலும் பகல்நேர வெப்பநிலை 28°செ முதல் 30°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 21°செ முதல் 22°செ ஆகவும் காலைநேர காற்றின் ஈரப்பதம் 93 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 41 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 9-15 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை பதிவானது.

### திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

| கடந்தவார வானிலை (26.12.2022 முதல் 29.12.2022) | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 04.01..2023- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 26/12 | 27/12 | 28/12 | தேதி | நாள்-1 31/12 | நாள்-2 01/01 | நாள்-3 02/01 | நாள்-4 03/01 | நாள்-5 04/01 |
| 7.1 | 2.7 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 28 | 28 | 30 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 31 | 31 | 32 | 32 | 32 |
| 22 | 22 | 21 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 21 | 21 | 22 | 22 | 22 |
| 6 | 6 | 5 | மேக மூட்டம் (ஆக்டர்) | 0 | 0 | 0 | 2 | 2 |
| 87 | 93 | 83 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 90 | 90 | 90 | 90 | 90 |
| 75 | 51 | 41 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 40 | 40 | 40 | 40 | 40 |
| 15 | 12 | 9 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 6 | 4 | 4 | 4 | 4 |
| 20 | 90 | 90 | காற்றுவீசும் திசை | 50 | 20 | 70 | 20 | 70 |

### எதிர்பார்க்கப்படும் வானிலை திருப்பூர் (31.12.2022 முதல் 04.01.2023)

வரும் நாட்களில் வானம் பெரும்பாலான மேக மூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு வறண்ட வானிலையை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 31°செ முதல் 32°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 21°செ முதல் 22°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 90

சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 40 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 4-6 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து வடகிழக்கு திசைவரை வீசக்கூடும்.

| திருப்பூர் மாவட்டத்தில் உள்ள தொகுதி வாரியாக உள்ள அடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | அவினாசி | தாராபுரம் | குடிமங்கலம் | காங்கேயம் | குண்டடம் | மடத்துக்குளம் | மூலனூர் | பல்லடம் | பொங்கலூர் | திருப்பூர் | உடுமலைப்பேட் | ஊத்துக்குளி | வெள்ளக்கோவில் |
| 31-12-2022 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| 01-01-2023 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| 02-01-2023 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| 03-01-2023 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| 04-01-2023 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |

### வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| **பொது அறிவுரை** | | அடுத்த 5 நாட்களுக்கு மிக குளிர்ந்த இரவுநேர வெப்பநிலையுடன் வறண்ட வானிலையுடன் காற்றின் வேகம் 4 - 8 கி.மீ வரை எதிர்பார்க்கப்படுபிறது.<br>பகல் மற்றும் இரவு நேர வெப்பநிலை சிறிது உயர்ந்து வருகிறது.<br>மண் ஈரத்தினைப்பொறுத்து நீர் பாசனம் செய்யவேண்டும். |
| மக்காச்சோளம் | வளர் மற்றும் பூக்கும் பருவம் | ஈரப்பதமான குளிர்ந்த வானிலையால் மக்காச்சோளத்தில் அடி சாம்பல் நோய் தென்பட்டால் பாதிக்கபட்ட செடியினை அகற்றவும். ஏனெனில் மருந்துகள் கொண்டு இவற்றை கட்டுப்படுத்த தற்போது இயலாது.<br>தற்போது நிலவும் வானிலையில் 45 நாள் வயதுடைய இறவை மக்காச்சோளப்பயிருக்கு ஒரு எக்டருக்கு 74 கிலோகிராம் யூரியா கொண்டு உரமிடவும். |
| கொண்டைக்கடலை | வளர் மற்றும் பூக்கும் பருவம் | தற்போது நிலவும் வானிலையால் கொண்டைக்கடலையில் வாடல் நோய் வரவாய்ப்புள்ளது. நோய் தாக்கியிருக்கும் இடங்களில் ஒரு சத கார்பன்டெசிம் கரைசலை தெளித்து கட்டுப்படுத்தலாம். |
| கரும்பு | நடவு | வறண்ட காலநிலை எதிர்பார்க்கப்படுவதால், முன் பருவ கரும்பு நடவிற்கு நிலம் தயார் செய்யவும். நடவிற்கு முன்பு அடியுரமாக ஒரு எக்டருக்கு 25 டன் தொழு உரம் அல்லது 37.5 டன் கரும்பு ஆலைக்கழிவு இட வேண்டும். இதைத் தொடர்ந்து நிலத்தினை வட்டக்கலப்பை மற்றும் கொத்து, கலப்பை கொண்டு உழுது பின்பு லேசர் கருவி கொண்டு சமன் செய்யவும். கரும்பு கரணைகளை நடுவதற்கு முன்பு 50 கிராம் கார்பன்டசிம் (ஊயசநெனேயணைஅ) ரூ 200 மில்லி மாலத்தியான் (Malathion) + 1 கிலோ யூரியா கலர்க 100 லிட்டர் தண்ணீரில் 15 நிமிடம் ஊறவைக்கவும். |

| | | |
|---|---|---|
| வாழை | | இறவை தோட்டக்கால் பகுதியில் வாழையை நடுவு செய்தபின் நீர்பாசனம் செய்யவும். |
| தென்னை | | தென்னை மரங்களுக்கு உரமிடுவதற்கு சரியான காலம். எனவே மரம் ஒன்றிற்கு யூரியா 650 கிராம், சூப்பர் பாஸ்பேட் 1 கிலோ மற்றும் மூயூரேட் பொட்டாஷ் 1 கிலோ, வேப்பம்புண்ணாக்கு 2 கிலோ, நுண்ணூட்டக்கலவை 500 கிராம் மற்றும் மக்கிய தொழு உரம் 50 கிலோ இடவேண்டும்.<br>காய்க்கும் தென்னை மரங்களுக்கு த.வே.ப.க தென்னை டானிக்கை 200 மிலியினை வேர் மூலமாக ஆறு மாத இடைவெளியில் கொடுக்கவும். |
| கால்நடைகள் | | கால்நடை மற்றும் கோழிகளுக்கு சுத்தமான குடிநீரை வழங்க வேண்டும். மேலும் கால்நடைகள் புதிதாக முளைத்த களை மற்றும் புற்களை மேயவிடாமல் பாதுகாக்கவும்.<br>கால்நடைகளின் தீவனப்பொருட்களில் நச்சு கலக்காமல் இருக்க நன்கு வெயிலில் உலர்த்தி உபயோகபப்படுத்தவும்.<br>தற்போது நிலவும் வானிலை காரணமாக மேற்கு தொடர்ச்சி மலையை சார்ந்த பகுதிகளிலுள்ள கால்நடைகளில் அடைப்பான் நோய் தாக்க வாய்ப்புள்ளது. இதனைக் காண்காணித்து அருகிலுள்ள கால்நடை மருத்துவமனையில் தடுப்பூசி போடவும். |

**குறுஞ்செய்தி**

- ஈரப்பதமான குளிர்ந்த வானிலையால் மக்காச்சோளத்தில் அடி சாம்பல் நோய் தென்பட்டால் பாதிக்கபட்ட செடியினை அகற்றவும். மருந்துகள் கொண்டு இவற்றை கட்டுப்படுத்த தற்போது இயலாது.

.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**